BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
An international open access, peer- reviewed, refereed journal

களவழி நாற்பது: செம்பதிப்புக்கான ஆய்வு மூலங்கள்

முனைவர் மு.முனீஸ்மூர்த்தி
தமிழ் - உதவிப் பேராசிரியர், பிஷப் ஹீபர் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி - 620 017, தமிழ்நாடு, இந்தியா.
96778 21364
moovendhan1887@gmail.com, muneesmoorthy.tm@bhc.edu.in

DR. M.MUNEES MOORTHY
Assistant Professor in Tamil, Bishop Heber College,
Tiruchirappalli - 620 017, TamilNadu, India.

ஆய்வுச் சுருக்கம்

நூற்பதிப்பில் மிகுந்த பொறுப்புணர்வுடன் செயலாக்கம் பெறுபவையே 'செம்பதிப்பு' எனும் சிறப்பிடம் பெற்றுத் தடம் பதிக்க இயலும். தமிழியலில் கடந்த ஒரு நூற்றாண்டு காலமாகவே செம்பதிப்புத் தொடர்பாக, செம்பதிப்பின் தேவை தொடர்பாக நீண்ட உரையாடல்கள், எழுத்துரைகள் அறிஞர் பெருமக்களால் முன்வைக்கப்பெற்று வந்துள்ளன. சங்க இலக்கியங்களின் பதிப்பு வரலாறு, உரைவரலாறு தொடர்பான ஆய்வுகள் தமிழில் முன்னெடுக்கப் பெற்றுள்ள அளவுக்குச் சங்கமருவிய கால இலக்கியங்களின் பதிப்பு வரலாறு, உரைவரலாறு தொடர்பான ஆய்வுகள் முன்னெடுக்கப் பெறவில்லை. பதினெண் கீழ்க்கணக்கில் இடம்பெறும் ஒரேயொரு புறநூல் களவழி நாற்பது. களவழி நாற்பது எனும் செவ்விலக்கிய நூலின் கருத்துப்பரவலுக்கு வித்திட்ட உரையாசிரியர்தம், பதிப்பாசிரியர்தம் புலமைசார் பங்களிப்பினைக் காய்தல் உவத்தலின்றி எடுத்துரைத்து, செம்பதிப்புக்கான ஆய்வுமூலங்களாக அவை திகழும் பாங்கினை எடுத்துரைப்பதனை முதன்மை நோக்கமாகக் கொண்டது இந்த ஆய்வுரை.

குறிச்சொற்கள்

களவழி நாற்பது, செம்பதிப்பு, அனந்தராமையர், வேங்கடசாமி நாட்டார், சுப்பராயச் செட்டியார்.

பதிப்பும் செம்பதிப்பும்

செம்பதிப்புகள் மூலபாடச் செம்மை, உரைமொழிச் செம்மை எனும் வகைமையில் கவனம் கொள்ளப்பெற வேண்டும். எனினும், இவ்விரண்டனுள் முன்னதற்கு வழங்கும் முதன்மையைப் பின்னதற்கு வழங்கும் நிலையானது ஆய்வுலகில் இன்னும் வலுப்பெறவில்லை. உரைமொழி தொடர்பாகக் கவனம் செலுத்திய ஆய்வாக "தொல்காப்பியம்: எழுத்ததிகாரம் - நச்சினார்க்கினியர் உரை" எனும் (இரா.அறவேந்தன் & ம.லோகேஸ்வரன், 2017) உரைமொழி ஒப்பீட்டு ஆய்வுநூலினைக் குறிப்பிடலாம். அறிவு, புலமை காரணமாகக் காலந்தோறும் மூலத்தில், உரைகளில் உள்ள பிழைகள் திருத்தம் பெறுதல் இயல்பு. எனினும், பிழைகளைக் களைவதற்குத் தகுந்த அகச்சான்றுகளைத் துணைக்கொள்ள வேண்டுமேயன்றித் தற்சார்பில், ஊக அடிப்படையில் திருத்தம் மேற்கொள்ளுதல் பதிப்பு அறம் ஆகாது என்பதனைப் பதிப்பாசிரியர்கள் மனங்கொள்ளல் வேண்டும்.

களவழிநாற்பது பதிப்பு - அறிமுகம்

பதினெண் மேற்கணக்கு நூல்களுக்கு முன்னர்ப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களே அச்சிற் பதிப்பிக்கப் பெற்றுள்ளதனைப் பதிப்பு வரலாற்றின்வழி அறிய முடிகின்றது. 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில்(1812இல்) கீழ்க்கணக்கு நூல்களுள் 'திருக்குறள்-நாலடியார் மூலபாடம்' பதிப்பிக்கப் பெற்றுள்ளது. தொடர்ந்து கீழ்க்கணக்கு அறநூல்களே அச்சிற் பதிப்பிக்கப்பெற்று வந்துள்ளன.

களவழி நாற்பது நூலினைப் பொறுத்தவரையில் சோடசாவதானம் சுப்பராயச் செட்டியாரின் பதிப்பே முதற்பதிப்பாக அமைகின்றது. எனினும், தற்போதுள்ள நிலையில் அவருடைய பதிப்பினை மீள்பதிப்புச் செய்த கா.ர.கோவிந்தராஜ முதலியாரின் பதிப்பே (1913) தற்போது பரவலாகப் பயன்பாட்டுக்குக் கிடைக்கின்றது.



உ

கடவுள் துணை

சங்கமருவிய செய்யுள்களுள் ஒன்றாகிய

பொய்கையார் அருளிச்செய்த

களவழி நாற்பது

மூலமும் உரையும்.

1966

இது

சென்னைப் பச்சையப்பன் காலேஜ்

தமிழ்ப்பண்டிதர்

கா. ர. கோவிந்தராஜ முதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு,

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1913

விலை அணா 2.

[Copyright Registered.]

கா.ர.கோ.வின் நான்கு பக்க முகவுரையில் பின்வரும் தரவுகள் முதன்மையாக முன்வைக்கப் பெற்றுள்ளன.

- களவழி நாற்பது சங்க நூற்றொகைகளுள் ஒன்று (அதாவது, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களையும் சங்க நூல்களாகக் கருதுதல்)
- கீழ்க்கணக்கு நூல்கள் எவையெவை எனும் விவரம்.
- மேற்கணக்கு, கீழ்க்கணக்கு நூல்களுக்குரிய வரையறை தரும் பன்னிருபாட்டியல் சூத்திரங்கள்.
- களவழி நாற்பதின் ஆசிரியர் முதலாழ்வார் மூவருள் ஒருவராகிய பொய்கையார் (தனது இக்கருதுதலுக்கு வலுச் சேர்ப்பதற்கு மு. இராகவையங்காரின் 'பொய்கையார்' என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரைச் செய்திகளை முன்னிலைப்படுத்தல்).
- களவழி நாற்பதின் பாட்டுடைத் தலைவன் சோழன் செங்கணான்.
- பொய்கையாரின் மதம் வைஷ்ணவம்.
- இந்நூலின்(இந்நூலாசிரியரின்) காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்டது.

கா.ர.கோ.வின் முகவுரையினைத் தொடர்ந்து ஒன்றரைப் பக்க அளவிலான முன்னுரைப் பகுதி காணப்பெறுகின்றது. இப்பகுதியானது சுப்பராயச் செட்டியாரின் முகவுரை என்பது கா.ர.கோ.வின் முகவுரைவழி அறியலாகின்றது.

தொடர்ந்து 1924இல் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின்வழி வெளிவந்த ந.மு.வேங்கடசாமி நாட்டாரின் களவழி நாற்பது உரைநூல் தனித்துச் சுட்டப்பெற வேண்டிய தகுதிபெறு நூலாகும்.

நடுக்காவேரி முத்துச்சாமி வேங்கடசாமி நாட்டார் எனச் சிறப்பிக்கப் பெறுபவர். பழந்தமிழ் நூற்பதிப்பு வரலாற்றிலும் நாட்டாருக்குத் தனியிடமுண்டு.

கீழ்க்கணக்கு நூல்களுள் இன்னா நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது ஆகிய நூல்களுக்கு உரை எழுதிப் பதிப்பித்துள்ளார்.



கழக வெளியீடு-எக

பதினெண் கீழ்க்கணக்கு

பொய்கையார்

இயற்றிய

களவழி நாற்பது

இது

திருச்சிராப்பள்ளி, பிஷப் ஹீபர் காலேஜ்

தலைமைத் தமிழாசிரியர்

ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்

எழுதிய

உரையுடன்

திருநெல்வேலி, தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்

திருநெல்வேலி :: & சென்னை

(1934)

திருச்சிராப்பள்ளி பிஷப் ஹீபர் கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராகத் திகழ்ந்த காலத்தில் களவழிநாற்பது நூலுக்கு உரையெழுதி அதனைப் பதிப்பித்துள்ளார் ந.மு.வேங்கடசாமி நாட்டார். 1924இல் இவ்வுரைப்பதிப்பு வெளிவந்துள்ளது. இவ்வுரையானது சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின்வழி வெளிவந்துள்ளது. இவ்வுரை நூலானது, முகவுரை, மூலமும் உரையும், பாட்டு முதற்குறிப்பு அகராதி, அருஞ்சொல்லகராதி ஆகிய பகுதிகளைக் கொண்டு விளங்குகின்றது.

10 பக்க அளவிலான முகவுரையில் பல்வேறு இன்றியமையாத் தரவுகளையும் விவாதக் குறிப்புகளையும் இடம்பெறச் செய்துள்ளார் ந.மு.வே. நாட்டார். அக்குறிப்புகளில் சில வருமாறு:

- களவழி நாற்பது சங்கத் தொகை நூல்களில் ஒன்று (அதாவது, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களையும் சங்க நூல்களாக கருதுதல்)
- கீழ்க்கணக்கு நூல்கள் 18 என்பது தொல்காப்பியச் செய்யுளியலுக்கு உரை எழுதிய பேராசிரியர், நச்சினார்க்கினியர் உரைகளால் அறியலாகிறது எனல்.
- கைந்நிலையை விடுத்து இன்னிலையைத் தனிநூலாகக் கொள்ளுதல்.
- களவழி நாற்பது நூலின் பெயர்க்காரணக் குறிப்பினைப் பழைய உரைகாரர் எழுதியதாகக் குறிப்பிடுதல்.
- களவழி நாற்பது நூலாக்கம் பற்றிய சிற்றிலக்கியக் குறிப்புகளைத் தருதல்.
- களவழி நாற்பதின் பெயர்க்காரணக் குறிப்பும் புறநானூற்றின் 74 ஆம் பாடலாகிய 'குழவி இறப்பினும்' எனும் பாடலுக்குக் கீழ் இடம்பெற்றுள்ள (தமிழ் நாவலர் சரிதையில் இடம்பெற்றுள்ள) குறிப்பும் முரண்பாடுடையதாகக் கருதுதல். குறிப்பாக, முதற் குறிப்பில் 'குடவாயிற் கோட்டம்' என்றும், இரண்டாவது குறிப்பில் 'குணவாயில் கோட்டம்' என்றும் குறிக்கப் பெற்றிருப்பதாகச் சுட்டுதல்.
- பொய்கையாழ்வாரால் இயற்றப்பட்டது களவழி நாற்பது எனும் முந்தையோர் கருத்தை மறுத்தல்.
- களவழி நாற்பதின் ஆசிரியர் பொய்கையார் எனல். அவர் சங்கத்துப் புலவர் எனல்.
- களவழி நாற்பதின் காலம் கிபி 250 அல்லது அதற்கும் முற்பட்டது எனல்.
- களவழி நாற்பதின் பாட்டுடைத் தலைவனாகிய கோச்செங்கணானைச் சிவனடியார்களுள் ஒருவராகிய செங்கட்சோழ நாயனாராகக் கருதுதல்.

· திருவானைக்காவில் கோயில் கொண்டுள்ள சிவபெருமானை வழிபட்ட சிலந்தி ஆனது செங்கட் சோழன் ஆக பிறந்ததாக குறிப்பிடும் புராணக் குறிப்பினை வரலாற்றுக் குறிப்பு எனச் சுட்டுதல்.

· நூலாசிரியர் பொய்கையாரின் பிறப்பிடம் பற்றிய விவாதக் குறிப்பினை முன்வைத்திருத்தல் (பொய்கை எனும் நாடு; பொய்கை எனும் ஊர்; தொண்டி எனும் ஊர்).

· களவழி நாற்பது நூலில் உள்ள சிறப்புச் செய்திகளை (யானைப்போர் மிகுதி, திருக்கார்த்திகைத் திருவிழா) விதந்து கூறுதல்.

· தான் உரை எழுதுவதற்கு முன்பு இந்நூலுக்கு அமைந்துள்ள உரைகள் (1.பழைய உரை, 2.சோடசாவதானம் சுப்பராயச் செட்டியார் உரை) பற்றிய தகவலையும் அவ்வுரைகளின் இயல்பினையும் பதிவிட்டிருத்தல்.

· தான் எழுதிய உரையின் இயல்பு பற்றிய முன்னுரைப்புதலும் அளித்திருத்தல்.

· பாட வேற்றுமை(பிரதிபேதம்) சுட்டியுள்ளமை பற்றிய குறிப்பு.

1931: களவழி நாற்பது பதிப்பு - இ.வை.அனந்தராமையர்



கணபதி துணை.

சங்கமருவிய
பதினெண் கீழ்க்கணக்கினுள் ஒன்றும்
பொய்கையார் இயற்றியதுமாகிய

களவழி நாற்பது

மூலம்

பழைய வுரையோடும்
தாம் எழுதிய குறிப்பு, ஒப்புமைப்பகுதி,
பிரயோகவிளக்கங்களோடும்

இடையாற்று மங்கலம்
வைத்தீச்சுவரையரவர்கள் குமாரரும்
சென்னை,
பிரஸிடென்ஸி காலேஜ் Retired தமிழ்ப்பண்டிதரும்
ஆகிய
அனந்த ராமையரால்
தங்கு பரிசோதிக்க,
சென்னை
நோபில் அச்சுக்கூடத்தில்,
பதிப்பிக்கப்பெற்றது.

[காபி ரைட்] 1931 [விலை அணா 8.

தமிழ்நூற் பதிப்பாசிரியர்களுள் இ.வை.அனந்தராமையர் தனித்து அடையாளப்படுத்தப்பெற வேண்டியவர் ஆவார். சென்னை மாநிலக் கல்லூரியில் பணியாற்றிய இ.வை.அனந்தராமையர் பதிப்பித்த நூல்களின் எண்ணிக்கையானது குறைவு எனினும் அந்நூல்களின் பதிப்புச் செம்மையால், பதிப்பு உட்கூறுகளால் மிகுகவனம் பெறும் வகையில் பதிப்பித்த சிறப்புக்குரியவர். இவர்தம் பதிப்புச் செம்மைக்கு இவர் பதிப்பித்த கலித்தொகை நூலே சான்று. இவர் பதிப்பித்த செவ்வியல் நூல்களாவன:

1925 - கலித்தொகை (பாலை, குறிஞ்சி)
1925 - கலித்தொகை (மருதம், முல்லை)
1930 - கலித்தொகை மூலம் மட்டும்
1931 - கலித்தொகை (நெய்தல்)
1931 - களவழி நாற்பது
1931 - ஐந்திணை எழுபதும் கைந்நிலையும்

உ.வே.சா.வின் பதிப்புப் பட்டறையில் உடனிருந்து பதிப்புநுட்பங்களை உள்வாங்கிக்கொண்ட இ.வை.அ.வின் புலமை அவர் பதிப்பித்த நூல்களுள் நன்கு மிளிரக் காணலாம்.

களவழி நாற்பது மூலமும் பழைய உரையும்

களவழி நாற்பது பதிப்புநூலை இ.வை.அ. 1930 நவம்பரில் நிறைவு செய்து அளித்துள்ளார். இதனை அவர்தம் முகவுரைவழி அறிய இயலுகிறது. அப்பணியானது 1931இல் அச்சாக்கம் பெற்று வெளிவந்துள்ளது. இந்நூலின் விலையானது 8 அணா எனக் குறிக்கப்பெற்றுள்ளது.

இவரது இப்பதிப்பில் 18பக்க அளவில் மிக விரிவான ஆய்வு முன்னுரையை 'களவழி நாற்பதின் முகவுரை' எனும் பெயரில் அமைத்துள்ளார். 18பக்கம் என்பது இயல்பானதாகத் தோன்றலாம். 40 வெண்பாக்கள் மட்டுமே கொண்ட இந்நூலின் மூலமும் உரையும் இ.வை.அ.வின் ஆய்வுக் குறிப்புகளுமாக 38 பக்கம் அமைவது கொண்டு நோக்க, இப்பக்க அளவானது மிகுதியே! அந்த அளவிற்கு ஆராய்ச்சிக் குறிப்புகளை இப்பகுதியில் இடம்பெறச் செய்துள்ளார் இ.வை.அ.

முகவுரையில் இடம்பெறும் முதன்மைச் செய்திகள்

1887இல் கலித்தொகையை முதன்முதலில் பதிப்பித்த சி.வை. தாமோதரம்பிள்ளை அந்நூலில் விரிவானதொரு (முப்பத்து நான்கு பக்க அளவில்) பதிப்புரை அமைத்துள்ளார். இப்பதிப்பிற்குப் பிறகு பதிப்புநூல்களில் விரிவான முன்னுரை எழுதும் மரபு பதிப்பாசிரியர்களால் கையாளப் பெற்றுள்ளது. இம்மரபினை இ.வை.அ.வும் பின்பற்றியுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

களவழி நாற்பதின் முகவுரையில் பின்வரும் முதன்மைத் தரவுகள் இடம் பெற்றுள்ளன.

i) களவழி நாற்பது நூலின் இறுதியில் இடம்பெறும் இந்நூலின் மையப்பொருண்மைத்தொடர் ('சோழன் செங்கணானுஞ் சேரமான் கணைக்கால் இரும்பொறையுந்.... களவழி நாற்பது') பற்றிய வாத - விவாதம்.

ii) நூலின் மொழியாளுமை

iii) நூற்பெயர்க் காரணம்

iv) பாட்டுடைத்தலைவன் பற்றிய வாத - விவாதம்

v) நூலாசிரியர் பொய்கையார் யார் என்பது பற்றிய வாத - விவாதம்

vii) நூலின் காலம்

viii) முந்தைய பதிப்புகளில் சுட்டப்பெறாத திருத்தங்கள் (பிரதிபேதங்கள்) மூலம், உரை இரண்டிலும் மேற்கொண்டமை பற்றிய முன்னோட்டக் கருத்து.

ix) கருத்து மறுப்பில் நனிநாகரிகம் பின்பற்றியுள்ளமை.

இம்முகவுரைப் பகுதியில் இ.வை.அ. முன்வைத்துள்ள சில செய்திகள் மிகுகவனத்திற்கு உரியனவாகும். அவற்றுட் சில:

- பன்னிரு பாட்டியல் என்னும் நூல் போலிநூல் எனக் கருதுதல் (ப.1; ப.16).
- பழைய உரை, உரையாசிரியர்கள் மீதான நன்மதிப்பு (ப.3).
- 'திருப்போர்ப்புறத்துப் பொருது ....' எனும் தொடரில் உள்ள போர் என்பதனைச் சோழநாட்டில் உள்ள ஒரு நகர் எனச் சான்றுடன் நிறுவுதல் (பக்.4-5).
- கணைக்கால் இரும்பொறையை வென்ற கோச்செங்கணானும் கோச்செங்கட்சோழ நாயனாரும் ஒருவரல்லர் எனல் (ப.9).
- களவழி பாடிய பொய்கையாரும் ஆழ்வார்களுள் ஒருவரான பொய்கை ஆழ்வாரும் ஒருவரல்லர் எனல் (பக்.14-16).
- நூலின் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு என ஊகித்தல் (ப.17).

நூலின் மையப்பகுதி

இ.வை.அ. பதிப்பின் மையப்பகுதி களவழி நாற்பது மூலமும் உரையும் என்பதாக அமைகின்றது. இப்பகுதியானது, பாடல், பழைய உரை, இ.வை.அ.வின் குறிப்பு, இலக்கிய ஒப்புமை மேற்கோள் என்னும் முறைமையில் அமைந்துள்ளது. பாடலானது தளையமைப்புச் சிதையாமல் மரபு முறையில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. பாடலைத் தொடர்ந்து பழைய உரை பதிப்பிக்கப் பெற்றுள்ளது. தொடர்ந்து, இ.வை.அ.வின் குறிப்பு இடம்பெற்றுள்ளது. குறிப்பு என நூலின் அட்டை, முகப்பு, உரைப்பகுதியில் இடம்பெற்றிருந்தாலும் இதனைக் குறிப்புரை எனத் துணிந்து கூறலாம். இக்குறிப்புரைப் பகுதியானது, அருஞ்சொற்பொருள் சுட்டுதல், குறிப்பிட்ட சொல், தொடருக்கான கூடுதல் விளக்கம் அளித்தல், பிற இலக்கிய ஆட்சி, இலக்கணக்குறிப்புச் சுட்டல், தொல்காப்பிய மரபுகளைப் பொருத்துதல், இடைக்கால உரையாசிரியர்களின் உரைக்கருத்துக்களைப் பொருத்துதல், வழக்காறு சுட்டுதல், நிகண்டுக் குறிப்புத் தருதல், பழைய உரையின் பொருத்தப்பாடு சுட்டுதல் என்பன போன்ற இன்றியமையா ஆய்வுத் தரவுகளை உள்ளடக்கிய வண்ணம் அமைந்துள்ளது.

இலக்கிய ஒப்புமை மேற்கோள் பகுதியானது 'பிறராட்சி' எனும் தலைப்பின்கீழ் அடிக்குறிப்பாகத் தரப்பெற்றுள்ளது. இலக்கிய மேற்கோள் சுட்டும் பதிப்பாசிரியர்களுள் குறிப்பிடத்தக்கவர் இ.வை.அ. அவர்கள்.

அவ்வகையில், இந்நூலில் தொல்காப்பியம், புறநானூறு, நற்றிணை, கலித்தொகை, பரிபாடல், முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, மலைபடுகடாம், மணிமேகலை, முத்தொள்ளாயிரம், சீவக சிந்தாமணி, சூளாமணி, பெருங்கதை, கம்பராமாயணம், பெரிய திருமொழி, புறப்பொருள் வெண்பாமாலை, மேருமந்தர புராணம், பெரும்பொருள் விளக்கம், யாப்பருங்கல விருத்தி ஆகிய நூல்களில் இருந்தும், தொல்காப்பிய உரையாசிரியர்களான சேனாவரையர், நச்சினார்க்கினியரின் உரைகளிலிருந்தும் இலக்கிய ஒப்புமை காட்டியுள்ளார் இ.வை.அ.

இ.வை.அ. பதிப்புநூலின் இறுதிப்பகுதியானது பிரதிபேதம், செய்யுள் முதற்குறிப்பகராதி ஆகிய இரண்டனையும் உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. செய்யுள் முதற்குறிப்பகராதி அளித்தல் பதிப்புநெறிகளுள் இயல்பாக அமையும் ஒன்றே! பிரதிபேதம் எனும் தலைப்பின்கீழ் மூலபாட வேறுபாட்டைத் தனித்துப் பட்டியலிட்டு இருத்தல் எதிர்கால ஆய்வுக்குப் பயன்தரத்தக்க தரவாகும். பல பிரதிகளை ஒப்புநோக்கி இந்நூலைப் பதிப்பித்த இ.வை.அ. அப்பிரதிகள் பற்றிய விவரம் எதுவும் குறிப்பிடவில்லை.

மிகைப்பாடல் பதிப்பிடல் (41+1)

களவழி நாற்பது நூலானது பெயர்க்காரண அடிப்படையில் 40 பாடல்கள் கொண்டதென வரையறுத்தாலும் 41 பாடல்கள் கொண்ட நூலாகவே முந்தைய பதிப்பாசிரியர்களால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. எனினும், இ.வை.அ. அவர்கள் கூடுதலாக ஒரு பாடலை இந்நூலின் இறுதியில் பாடலெண் இடாமல் நட்சத்திரக் குறியிட்டுத் தனித்து அடையாளமிட்டு, இப்பாடல் களவழி நாற்பது நூலைச் சேர்ந்ததாகத் தோன்றுகின்றது என்றும் புறத்திரட்டில் இப்பாடல் இடம்பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். இ.வை.அ. குறிப்பிட்டுள்ள மிகைப்பாடலும் அப்பாடல் இடம்பெற்றிருந்த சுவடியது நிலையும் அப்பாடல் பற்றிய அவர்தம் கருத்தும் வருமாறு:

*(படைப்பா லவிந்தார்) பரூஉக்குடர் மாந்திக்

குடைப்புறந் துஞ்சு மிகல - னிடைப்பொலிந்த

திங்களிற் றோன்றுங் குறுமுயல்போற் செம்பியன்

செங்கண் சிவந்த களத்து.

என்று புறத்திரட்டிற் காணப்படும் செய்யுளும் இந்நூலதே என்று தோற்றுகிறது. இதில் முதலடியின் முதலிருசீர் பல பிரதிகளில் இல்லை. ஒரு பிரதியில் நகவளைவினுள் பென்ஸிலால் எழுதப்பெற்றுள்ளது" (1931:38).

'பிரதிபேதம்' எனும் தலைப்பின்கீழ் 'மூலபாட வேறுபாடுகள்' இந்நூலிறுதியில் தனித்து அடையாளப்படுத்தப் பெற்றுள்ளன. இந்நூலுள் 57 பாடவேறுபாடுகள் சுட்டிக்காட்டப் பெற்றுள்ளன. பிரதிபேதம் பகுதியில் 32:2 எனும் பிரதிபேதக் குறிப்பு எண்விவரம் 33:2 என அச்சுப்பிழையாக அமைந்துள்ளது.

இவ்வாறாக, களவழிநாற்பது நூலின் பதிப்புவரலாற்றில் ஆய்வுக்குறிப்புகள் பலவற்றை உள்ளடக்கிய, தனித்துவம் பெற்ற பதிப்பாகத் திகழ்கின்றது இ.வை.அனந்தராமையரின் பதிப்பு.

களவழி நாற்பது - பழைய உரை - இயல்பும் தனித்தன்மையும்

உரையாசிரியரின் பெயர் அறியப் பெறாத வகையில் கிடைக்கும் பழந்தமிழ் இலக்கண இலக்கிய உரைகளைப் பழைய உரை என்றும் அவ்வுரையாளரைப் பழையவுரைகாரர் என்றும் வழங்குவது பெருவழக்காக உள்ளது. பழைய உரையைப் பெயர் அறியப்படாத உரை என்றே வழங்குதல் வேண்டும் எனும் கருத்தும் உள்ளது. பெயர் அறியப்படாமை கருதி மட்டும் இதற்குப் பழைய உரை எனும் பெயர் வழங்கப்பெறுதல் இல்லை. அவ்வுரையின் தொன்மை கருதியும் இப்பெயர் வழங்கப்பட்டு வருகின்றது. பழந்தமிழ் நூல்களுள் சிலவற்றுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட பழைய உரைகள் கிடைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

களவழி நாற்பது நூலுக்குப் பழையவுரை அமைந்துள்ளது. இவ்வுரையானது ஓலைச்சுவடி வடிவிலிருந்து முதன்முதலில் 1931இல் இ.வை. அனந்தராமையரால் அச்சுநூல் வடிவில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இவ்வுரையின் இயல்பு பற்றி அறிதல் இன்றியமையாத ஒன்றாகும். இவ்வுரையானது இதன் பதிப்பாசிரியரால் பொழிப்புரை எனக் குறிக்கப்பெற்றுள்ளது. பாடற்பொருளுக்குத் தேவையான செய்திகளை உள்ளடக்கிய வண்ணம் இவ்வுரை அமைந்துள்ளது. எது எவ்வாறெனினும் இவ்வுரைநூல் பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாதல் கூடும். இவ்வுரையின் மொழிநடையானது குறிப்பிட்டுச் சுட்டத்தக்க வகையில் அமைந்துள்ளது. மொழித்தூய்மை பேணும் நோக்கில் சொற்கள் தேர்ந்தெடுத்துக் கையாளப் பெற்றுள்ளன. களவழி நாற்பதுக்கு 20, 21ஆம் நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட உரைகளில் அயல்மொழிச் சொற்கள் பரவலாகக் காணப்படுகின்றன. ஆனால் இப்பழையவுரையில் அத்தகு தன்மையைக் காணவில்லை. அரிதாக ஓரிடத்தில் மட்டும் 'செவ்வலங் குன்றம்' (10:3) - தாதுகிரி எனப் பிறமொழி வழக்கில் பொருள் கூறப்பட்டுள்ளது.

'பகைவரைக் கொன்ற போர்க்களத்தில்' எனும் பொருளில் களவழி நாற்பதில் '... அட்ட களத்து' எனத் தொடர் நிறைவுறும் வகையில் 36 பாடல்கள் அமைந்துள்ளன. அவற்றுள், 19 தொடர்களைப் பழைய உரையானது உள்ளது உள்ளவாறே உரையிலும் இடம்பெறச் செய்துள்ளது. அவ்விடங்கள் வருமாறு:

- புனனாடன் ஆர்த்து அமரட்ட களத்து (பா.1)
- அங்கண் விசும்பின் உருமெறிந்து (பா.6)
- அருமணிப் பூணேந் தெழின்மார்பி னியறிண்டேர்ச் செம்பியன் தெவ்வேந்தரை அட்ட களத்து (பா.6)
- செங்கண் வரிவரால் மீன்பிறழுங் காவிரிநாடன் (பா.7)
- கண்ணேர் கடுங்கணை மெய்ம்மறைப்ப, எவ்வாயும் எண்ணருங் குன்றிற் குரீஇயினம் போன்றன; பண்ணா ரிடிமுரசிற் பாய்புனனீர்நாடன் நேராரை அட்ட களத்து (பா.8)
- தெவ்வரை அட்ட களத்து (பா.10)
- கூடாரை யட்ட களத்து (பா.12)
- புனனாடன் நேராரை யட்ட களத்து (பா.20)
- செங்கட் சினமால் பொருத களத்து (பா.21)
- பாய்புனனீர்நாடன் கூடாரை அட்ட களத்து (பா.22)
- கொற்றவேற் றானைக் கொடித்திண்டேர்ச் செம்பியன் செற்றாரையட்ட களத்து (பா.23)
- கமழ்தெரியற் காவிரிநீர்நாடன் நன்னாரையட்ட களத்தின்கண் (பா.24)
- புனனாடன் மேவாரை யட்ட களத்து (பா.25; பா.27)
- புனனாடன் தெவ்வரை யட்ட களத்து (பா.26)
- புனனாடன் நண்ணாரை யட்ட களத்து (பா.28)
- செங்கட் சினமால் பொருத களத்து (பா.29)
- புனனாடன் ஒன்னாரை யட்ட களத்தின்கண் (பா.31)
- பாடா ரிடிமுரசிற் பாய்புனனீர்நாடன் கூடாரை அட்ட களத்தின்கண் (பா.41)

இத்தகைய இடங்களில் கூறியது கூறலைத் தவிர்க்கும் நோக்கில் உரையாசிரியர் பொருள் கூறாமல் பாடற்றொடரை உள்ளது உள்ளவாறே கையாண்டுள்ளார் என அமைதி கொள்ளினும், மீள்வரு தொடர்களுக்குப் பயில்வோர் உய்த்துணர்ந்து முன்னர்க் கூறிய பொருளையே இவ்விடத்தும் கொள்ளலாம் எனும் உத்தியைக் கையாண்டுள்ளாரெனக் கொள்ளினும் ஏற்புடைமையே! எனினும், 6, 8, 23, 41 ஆகிய பாடல்களிலுள்ள நெடுந்தொடர்களுக்குப் பொருளளிக்காமல் உள்ளவாறே உரையில் இடம்பெறச் செய்துள்ளமை கவனிக்கத்தக்கதாகும். இத்தகைய நெடுந்தொடர்களை உரையின்றிப் புரிந்துகொள்ளும் அறிவுநிலையில் உரைகாரரின் சமகாலத்தில் புலமையோர் திகழ்ந்திருத்தல் கூடும்.

இவ்வுரையில் தற்காலத்தில் வழக்கொழிந்த 'ஆநின்று' எனும் நிகழ்கால இடைநிலை பயன்படுத்தப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அக்குறிப்புகள் வருமாறு:

(1:3) கெழூஉம்	- செறியாநிற்கும்
(10:3) தோன்றும்	- தோன்றாநின்ற
(11:3) அதிரும்	- முழங்காநிற்கும்
(13:3;38:2) புரளும்	- புரளாநிற்கும்
(14:3) உமிழும்	- உமிழாநிற்கும்
(17:2) வீழ்தரும்	- சொரியாநின்ற
(18:2; 30:2) ஈர்க்கும்	- இழாநிற்கும்
(28:5) தோன்றும்	- தோன்றாநிற்கும்
(29:3) அலமருப	- அலமராநிற்பர்

(31:3) மிளிரும் - ஒளிவிடாநிற்கும்

(33:3) அவிரொளி - அவிராநின்ற ஒளி

(34:2) சுடரிலங்கு - ஒளி விளங்காநின்ற

(35:3) இழிதரும் - இழியாநின்ற

(40:3) முழங்குபோர்த்தானை - முழங்காநின்ற போர்த்தானை

பழைய உரைகாரர் அரிதாக ஓரிடத்து மட்டும் தன் கருத்துக்கு மாற்றான பிறிதோர் உரைக்கருத்தையும் தன் கருத்தின்பின் இடம்பெறச் செய்துள்ளமையைக் காண முடிகின்றது. 'நானாற் றிசையும்' (6:1) எனும் பதிவுக்கு 'நான்குநான்கு திசைதோறும்' என உரை குறிப்பிட்டுள்ள பழைய உரைகாரர், இதுதொடர்பான கூடுதல் குறிப்பையும் பதிவு செய்துள்ளார்.

'அல்லதூஉம் நானாற்றிசையு மென்பதனை உம்மைத்தொகையாக நான்கும் நான்குமென உம்மையை விரித்து எட்டுத் திசையென்று கொள்வாருமுளர்' (1931:7)

இக்குறிப்புக் கொண்டு நோக்கும்பொழுது இப்பழையவுரையின் காலத்திலிருந்த பிறிதோர் உரையாகலாம் என இதனைக் கருத இடமேற்படுகின்றது.

பழையவுரையின் மொழிநடையில் குறிப்பிட்ட ஒரு சொல்லுக்குரிய பொருள் குறிப்பிடுதலில் ஒருமித்த தன்மையைச் சில இடங்களில் காண முடியவில்லை. சான்றாக, குருதி எனும் பாடற்பதிவுக்கு உரையில் பல இடங்களில் குருதி என்றும், சில இடங்களில் உதிரம் என்றும் பொருள் குறிப்பிட்டுள்ளார் உரைகாரர். அதேபோல்,

(10:3) 'செவ்வலங் குன்றம்' - தாதுகிரி

(12:2,3) 'செந்தலைப், பூவலங் குன்றம்' - சிவந்த நிறத்தையுடைய செம்மண் மலைகள்

என இருவேறிடத்தும் மாறுபட்ட சொல்கொண்டு பொருளுரைத்துள்ளமையைக் காண முடிகின்றது.

19, 20ஆம் நூற்றாண்டுகளில் இந்நூலுக்கு உரையெழுதிய உரையாசிரியர்களின் மொழிநடையோடு பழைய உரையின் மொழிநடையை ஒப்பிடும்போது, சொற்செறிவாலும் சொற்சிக்கனத்தாலும் பிறமொழிக் கலப்பின்மையாலும் இப்பழையவுரை மிளிர்கின்றது. சான்றுக்குச் சில:

1) செல்சுடர் (4:3) - செல்சுடர் ஞாயிறு (பழைய உரை)
- செல்லுஞ் சூரியன் (பிறர்)

2) காலார் சோடு (9:2) - காற்கிட்ட அரணம் (பழைய உரை)
- காற்கிட்ட கவசம் (பிறர்)

3) ஊக்கி (16:2) - உள்ள மிக்கு (பழைய உரை)
- வீராவேசங் கொண்டு (பிறர்)

4) பெருவளி (24:3) - பெருங்காற்று (பழைய உரை)
- சண்டமாருதம் (பிறர்)

5) சீறி (27:1) - வெகுண்டு (பழைய உரை)
- கோபித்து (பிறர்)

பாடலில் எளிய சொல் இடம்பெற்றிருப்பின் உரையில் அச்சொல்லை அவ்வாறே இடம்பெறச் செய்துள்ள இயல்பையும் பழைய உரையினுள் காண முடிகின்றது. இவ்வாறாக, எளிமையிலும் புலமையிலும் தனக்கென்று தனித்ததோர் இடத்தைப் பெறுகின்றது களவழி நாற்பது நூலுக்கு எழுந்த பழையவுரை.

முடிவுரை

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒரேயொரு புறநூலாக அமைந்துள்ள களவழி நாற்பது எனும் நூலுக்குப் பெயரறியப்பெறாத பழைய உரை ஒன்று இடம்பெற்றுள்ளது. பதிப்பு எனும் நிலையில் களவழி நாற்பதுக்கு அமைந்த முதற்பதிப்பாக அமைவது தி.க.சுப்பராயச் செட்டியாரின் உரைப்பதிப்பாகும். இவரது உரையை 1913இல் மீள்பதிப்புச் செய்து வெளியிட்டுள்ளார் கா.ர.கோவிந்தராஜ முதலியார்.

சுப்பராயச் செட்டியாரின் காலத்தில் பழைய உரை புழக்கத்தில் இருப்பினும் அவ்வுரையானது பதிப்பிக்கப் பெறவில்லை. ஓலைச்சுவடி வடிவிலேயே அவ்வுரையானது தமிழ்ச்சூழலில் பயிலப்பெற்று வந்துள்ளது.

சுப்பராயச் செட்டியாரின் உரைநூலானது சிலவிடத்துப் பிழையான மூலபாடங்களையும் அதற்கேற்ற உரைகளையும் தேவையற்ற இலக்கணக் குறிப்புகளையும் கொண்டதாகக் கருதிய ந.மு.வேங்கடசாமி நாட்டார் பழையவுரையினை அடியொற்றிப் புதிய உரையை எழுதியுள்ளார். இவ்வுரைநூல் 1924இல் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின்வழி வெளிவந்துள்ளது.

பழைய உரையை முதன்முதலில் அச்சிற் பதிப்பித்தவர் இ.வை.அனந்தராமையர். இப்பதிப்பானது 1931இல் வெளிவந்துள்ளது. பாடவேறுபாட்டுச் சிந்தனை கொண்ட காலக்கட்டத்தில் இந்நூல் பதிப்பிக்கப் பெற்றிருப்பினும் ந.மு.வேங்கடசாமி நாட்டார், இ.வை.அனந்தராமையர் ஆகிய இரு பதிப்பாசிரியர்கள் மட்டுமே தம் நூலுள் பாடவேறுபாடு (பிரதிபேதம்) பற்றிக் குறிப்புகள் தந்து, தாம் பார்வையிட்ட சுவடிகளுள் இடம்பெற்றுள்ள பாடவேறுபாடுகளை அடிக்குறிப்பாகவும் பின்னிணைப்பாகவும் இடம்பெறச் செய்துள்ளனர். எனினும், தமக்குக் கிடைத்த சுவடி விவரங்கள் பற்றிப் பதிப்பாசிரியர் எவரும் எக்குறிப்பும் தரவில்லை.

20ஆம் நூற்றாண்டின் தொடக்கக்கால உரையாசிரியர்களுள் சுப்பராயச் செட்டியார், ந.மு.வேங்கடசாமி நாட்டார் ஆகியோர் உரையுடன் கூடுதலாக இலக்கணக் குறிப்புகளையும் இடம்பெறச் செய்துள்ளனர். ந.மு.வேங்கடசாமி நாட்டார், இ.வை.அனந்தராமையர் ஆகிய இரு பதிப்பாசிரியர்களும் இலக்கிய ஒப்புமைக் குறிப்புகளைத் தேவையான இடங்களில் தனிக்கவனம் செலுத்தி இடம்பெறச் செய்துள்ளனர்.

களவழி நாற்பது நூலுக்கு எழுந்த பதிப்புகள், உரைகளைத் தேவையான சுவடிகளுடன் மீள ஒப்புநோக்கி, உரிய ஒப்புமைக் குறிப்புகளுடன், பதிப்பாசிரியர்தம் விவாதக் குறிப்புகளையும் உள்ளடக்கிய பதிப்பு உருவாக்குதல் காலத்தின் தேவை. அப்பதிப்பானது களவழி நாற்பது – செம்பதிப்பு உருவாக்கத்திற்கான கருவிநூலாகத் திகழ்தல் நலம்!

துணைநின்றவை

- அனந்தராமையர் இ.வை.(பதி.), (1931), **களவழி நாற்பது மூலமும் பழையவுரையும்**, நோபில் அச்சுக்கூடம், சென்னை.
- கோவிந்தராஜ முதலியார் கா.ர.(பதி.), (1913), **களவழி நாற்பது மூலமும் உரையும்,** மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலை, சென்னை.
- சம்பந்தன் மா.சு., (1987), **அச்சும் பதிப்பும்,** மெய்யப்பன் பதிப்பகம், சென்னை.
- சுந்தரமூர்த்தி, இ., (2010), **பதிப்பியல் சிந்தனைகள்**, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
- சுப்பிரமணியன் ச.வே. (பதி.), (2008), **தமிழ்ச் செவ்வியல் நூல்கள்** (மூலம் முழுவதும்), மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.
- நாராயண வேலுப்பிள்ளை எம்.(உரை.), 2000, **பதினெண் கீழ்க்கணக்கு**, நர்மதா பதிப்பகம், சென்னை.
- மாணிக்கனார் அ.(உரை.), 1999, **பதினெண் கீழ்க்கணக்கு** (தொ-5), வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.
- வேங்கடசாமி நாட்டார் ந.மு.(உரை.), (1924), **பதினெண் கீழ்க்கணக்கு - களவழி நாற்பது,** சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி & சென்னை.

Funding

No funding was received for conducting this study.

Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.